
Prevent AIDS.

FINAL-CHAPTER-7.qxd 1/21/2007 12:55 AM Page 49

7





# படைப்பும் உருவாக்கமும்

எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றி எண்ணற்ற படைப்புகளை உருவாக்கக் கூடிய விதத்தில் எச்.ஐ.வி/எய்ட்ஸின் பரிமாணங்கள் உள்ளன. ஆரோக்கியம் சம்பந்தமானதாக மட்டும் இதைப் பார்க்கக் கூடாது. எச்.ஐ.வி/எய்ட்ஸ் வாழ்வோடும் இறப்போடும், போராட்டங்களோடும் சர்ச்சைகளோடும் தொடர்புடையது. சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் வளர்ச்சியோடு தொடர்புடைய எண்ணற்ற நிகழ்வுகளை இது கொண்டிருக்கிறது. இவற்றை பாலின பண்புகள், அறிவியல், உளவியல், தவறான நம்பிக்கைகள், போக்குகள், சட்டம், தொழிற்துறை, கொள்கைகள் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தும் போது சிறப்பான படைப்புக்கான ஏராளமான கருத்துக்களை நீங்கள் பெற முடியும்.

## எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான படைப்புகளுக்கு உதவும் சில உத்திகள்

### • சமீபத்திய நிகழ்வுகளின் போக்கை கவனித்தல்

- மக்கள் தொகையின் எந்தப் பிரிவினர் எதனால் எச்.ஐ.வி/எய்ட்ஸால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்பது பற்றி உங்களது படைப்பை உருவாக்க முயலுங்கள். இதை கட்டுப்படுத்த யாரெல்லாம் என்ன செய்கிறார்கள் என்பதும் அதில் இடம் பெறட்டும்.

### • தொற்றைத் தொடரும் முறைகள்

- சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடம் வைரஸ் தொற்றும் முறையை கவனிக்க வேண்டும். கனரக வாகனங்கள் செல்லும் வழிகளிலும், இடம் விட்டு இடம் பெயரும் தொழிலாளர்களுக்கிடையேயும் அவர்களது குடும்பங்களிலும் தொற்று நகரும் விதத்தை கவனிக்க வேண்டும்.
- எப்படி இது தொற்றுகிறது
- எப்படி தடுப்பது
- பிற நாடுகளில் காணப்படும் போக்கு

### • சமூக மனப்பாங்கு மற்றும் கலாச்சார நம்பிக்கைகள்

- செக்ஸ் மற்றும் பாலினப் பண்புகள் பற்றிய சமூக மனப்பான்மை
- அரசின் கொள்கைகளில் வெளிப்படும் மனப்பான்மை
- பல விதமான பயங்கள்
- போக்குகள்



www.textanalyse.dk

### • அந்தரங்க ரகசியத்தை மதிப்பது மற்றும் வெளியிடுவது தொடர்பான வாதங்களை அறிவது

### • தொன்று தொட்டு வரும் பாலின செயல்பாடு மற்றும் உறவுமுறைகளோடு எச்.ஐ.வி/எய்ட்ஸைப் பார்ப்பது

- மனைவியாக இருக்கும் காரணத்தால் மட்டுமே எச்.ஐ.வி/எய்ட்ஸைப் பெறும் வாய்ப்பை ஒரு பெண் பெற்றிருப்பது
- ஒரு பெண்ணுக்கான பரிவை பாலின பேதமை பாதிக்கும் விதம்
- பெண்களுக்கு உரிய அதிகாரம் வழங்குவதன் மூலம் எச்.ஐ.வி/எய்ட்ஸைத் தடுப்பது







**• எச்.ஐ.வி/எய்ட்ஸ், மனித உரிமைகள் மற்றும் நீதி**

- எச்.ஐ.வி/எய்ட்ஸோடு வாழ்பவர்களின் சட்டப் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை அறிய வேண்டும்
- எச்.ஐ.வி/எய்ட்ஸோடு வாழ்பவர் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதோடு அவர்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதையும் அறிய வேண்டும்
- மனித உரிமைகளோடு தொடர்புடைய பன்னாட்டு நடைமுறை மரபுகள், செயல் திட்டங்கள், இன விருத்தி பேணும் உடல் நலம், பாலின சமச்சீர் தன்மை, குழந்தைகளின் உரிமைகள் போன்ற கூறுகளின் நிலை மற்றும் இவை நடைமுறைப் படுத்தப்படும் நிலையும் அறியப்பட வேண்டும்.

**• வளர் இளம் பருவத் தினரைப் பற்றியும் அவர்கள் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பெறும் வாய்ப்பு பற்றியும் அறிவது**

**• பள்ளிகள் மற்றும் பல்கலை கழகங்கள் ஆகியவற்றில் எச்.ஐ.வி/ எய்ட்ஸின் தாக்கம் அறிவது**

- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஏற்படுத்தியுள்ள தாக்கம்
- எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றுக்கெதிராக வெற்றி பெறுவதில் ஆசிரியர்களின் பங்கு மற்றும் அதற்கு சில உதாரணங்கள்

**• குடும்ப அமைப்புகளிலும் உறவுகளிலும் எச்.ஐ.வி/ எய்ட்ஸின் தாக்கம்**

**• குழந்தைகளும் எச்.ஐ.வி/எய்ட்ஸும்**

- தாய் மூலமாக எச்.ஐ.வி. பரவுதல் மற்றும் அதைத் தடுக்கும் முறை
- எய்ட்ஸால் அனாதையானவர்கள். முந்தைய தலைமுறையினரிடம் இதன் வீச்சு மற்றும் ஏற்படுத்தியுள்ள தாக்கம்
- எச்.ஐ.வி/எய்ட்ஸின் காரணமாக முந்தைய தலைமுறையினரின் மாறிவரும் சமுதாயப் பங்கு
- எய்ட்ஸால் அனாதையானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்குக் காட்ட வேண்டிய ஆதரவு பற்றிய வழிமுறைகள்

**• பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஏற்படுத்தும் தாக்கம்**

- தொழில் துறை, வணிகம், விவசாயம் மற்றும் பிற துறைகளில் உருவாக்கும் தாக்கம்
- தொடர்ந்து இது சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கம்

**• பாலியல் தொழில்**

- பாலியல் தொழிலாளருக்கும், வாடிக்கையாளருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் தொற்று பரவாமலிருக்க சுகாதார சேவை அமைப்புகளும் அரசும் மேற்கொண்டிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிவது
- பாலியல் தொழிலாளர்களுக்காகவும் அவர்களது வாடிக்கையாளர்களுக்காகவும் உருவாக்கப்பட்டுள்ள திட்டங்கள் எவை, இதில் எது பலனளிக்கிறது? எவை பலனளிக்கவில்லை என்பதை அறிவது. (உதாரணம்இது போன்ற சமூதாயப் பிரிவுகளில் பாலியல் தொழிலாளர்களும் தலைவர்களும் பெற்றிருக்கும் அதிகாரம் பற்றிய தகவல்களை அறிவது.
- பாலியல் தொழிலை வளர்த்திருக்கும் பொருளாதார நிலை மற்றும் பாலின பாகுபாடுகளை அறிவது
- பாலியல் தொழிலை கைவிட உதவிடும் மாற்றுப் பொருளாதார சாத்தியங்களை அறிவது (கடனுதவித் திட்டங்கள்)

**• எச்.ஐ.வி. எய்ட்ஸ் தொற்று பற்றி சமுதாய மற்றும் மதத் தலைவர்களின் பார்வை**

**• இந்திய சுகாதாரத் துறை**

- ஏ.ஆர்.டி. மருந்துகளை இலவசமாக வினியோகிப்பது
- பரிசோதித்தல்
- ஆலோசனை தருவது
- பரிவு காட்டுவது
- சிகிச்சை பெறும் அமைப்பிலுள்ளவர் பற்றிய மனப்பாங்கு

**• எச்.ஐ.வி/எய்ட்ஸ் பெற்றிருப்போருக்கான சிகிச்சை மற்றும் ஆதரவு**

- எய்ட்ஸுக்கான சிகிச்சைகள், மருந்துகள் மற்றும் இவை கிடைக்கும் விதம்
- அரசின் கொள்கை
- எய்ட்ஸுக்கான சிகிச்சையோடு தொடர்புடைய செலவுகள் மற்றும் சவால்கள்

**• மருந்து எதிர்ப்புத் தன்மையும் விளைவுகளும்**

**• எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு**

வைரஸை விட, அதைப் பெற்றிருப்பதால் தீண்டத் தகாதவராக நடத்தப்படுவதாலேயே நான் இறந்து கொண்டிருப்பதாக சில சமயங்களில் எனக்கு திகில் ஏற்படுகிறது.

**அமெண்டா ஹெக்ஸ்**
எச்.ஐ.வி/எய்ட்ஸோடு வாழும் பிரிட்டிஷ் பெண்மணி

FINAL-CHAPTER-7.qxd 1/21/2007 12:57 AM Page 51





- **மருந்துகள் தயாரிப்பு பற்றிய ஆய்வுகள் மற்றும் இவற்றைப் பரிசோதித்தல்**

- **எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான தவறான நம்பிக்கைகளும் போலி சிகிச்சை முழக்கங்களும்**

- **மருந்துப் பொருட்கள் தயாரிக்கும் துறை**
  - காப்புரிமை மற்றும் நடைமுறைகள்
  - மருந்துகளின் விலை
  - ஆய்வு

- சாதித்தவர்களின் கதை

- **திரைப்படங்களும் ஊடகங்களும்**

- **கொள்கை தொடர்பான கேள்விகள்**
  - பன்னாட்டு திட்ட செயல்பாடுகள் மற்றும் அக்கறை
  - நன்கொடை தரும் நாடுகளின் அரசு உட்பட, அரசுக் கொள்கைகள் மற்றும் அவற்றின் விளைவுகள்
  - எதிர்கால முயற்சிகள் பற்றிய கலந்தாலோசனைகள்




cf.acrewoods.net

- ஆய்வுகளுக்கு நிதி ஒதுக்குதல்
- ஏ.ஆர்.டி. மருந்துகளை ஏற்றுமதி செய்தல்

- **சட்டப் பிரச்னைகள்**
  - உரிமைகள்
  - காப்புரிமைகள்
  - பாகுபாடுகள்

- **புள்ளிவிபரங்களும் உண்மை நிலையும்**
  - தேசிய அளவிலான மதிப்பீடுகள் மற்றும் புள்ளிவிபரங்களை சேகரிக்கும் முறைகள்
  - புள்ளிவிபரங்கள் மற்றும் ஆய்வுகள் காட்டும் முரண்பாடுகளும் நிலையில்லாத முடிவுகளும்
  - கணிப்புகள்

- **மனித ஆர்வம்**
  - தொழில், உறவுகள் மற்றும் உடல் நலம் ஆகியவை சார்ந்த எச்.ஐ.வி/எய்ட்ஸோடு தொடர்புடையவர்களின் வாழ்வு
  - படைப்பில் கூறப்படும் அனுபவங் களை, யாருக்காக படைப்பு உருவாக்கப் படுகிறதோ, அவர்களோடு தொடர்பு படுத்திப் பார்க்க முடிவது

- எப்படி கொள்கைகள் வகுக்கப்படுகின்றன, யாருடைய கருத்துக்கள் கேட்கப் படுகின்றன, யாருடைய குரல்கள் கேட்பதேயில்லை

- **அமைப்புகளின் பணி**
  - அரசுகளும் அமைப்புகளும் தங்களது திட்டங்களை செயல்படுத்துகின்றனவா?
  - தங்களது திட்டங்களை குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் செயல்படுத்துகின்றனவா?
  - இவற்றின் நோக்கங்கள் நிறைவேறு கின்றனவா? இதற்கு சான்றுகள் என்ன?
  - இவற்றின் பலன்களை யார் பெறுகிறார்கள்?

- **நிதி உதவி**
  - சென்றடைய வேண்டியவரை நிதி உதவிகள் சரியாக அடைகின்றனவா?
  - இவை திறம்பட பயன்படுத்தப்படுகின்றனவா?
  - இவை திறம்பட நிர்வகிக்கப்படுகின் றனவா?
  - பயன்படுத்தப்படாத நிதி உதவிகள் இருக்கின்றனவா?